உ

சிவமயம்

# திருவீழிமிழலை

## (தல வரலாறு குறிப்பு)



19539

ஸ்ரீ கல்யாணசுந்தரமூர்த்தி

திருவீழிமிழலை தேவஸ்தான வெளியீடு

உ

சிவமயம்

அருள்மிகு படிக்காசு விநாயகர் துணை

திருக்கயிலாய பரம்பரைத்

திருவாவடுதுறை ஆதீனத்திற்குச் சொந்தமான

# திருவீழிமிழலைத் தல வரலாறு, கல்வெட்டு, தேவாரம் முதலியன

திருவீழிமிழலை தேவஸ்தான வெளியீடு — 1982
இரண்டாவது வெளியீடு — 1990.
மூன்றாவது வெளியீடு — 1995

விலை ரூ. 3—00.



ஸ்ரீ நமசிவாயமூர்த்தி அச்சகம்,
— திருவாவடுதுறை —

உ

சிவமயம்

அருள்மிகு படிக்காசு விநாயகர் துணை

திருக்கயிலாய பரம்பரைத்

திருவாவடுதுறை ஆதீனத்திற்குச் சொந்தமான

# திருவீழிமிழலைத் தல வரலாறு

இத்தலம் பூகைலாசம், கல்யாணபுரம், பஞ்சாக்கர புரம், தெக்ஷிணகாசி, ஷண்மங்களஸ்தலம், சுவேத கானனம், ஆகாச நகரம், பனசாரணியம், நேத்தரார்ப்பண புரம், தேஜிநீவனம் எனப் பத்துத் திருநாமங்களை யுடையது.

திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் முதலிய நாயன்மார் மூவராலும் பாடப்பெற்ற இருபத்து மூன்று திருப்பதிகங்களை உடையது. சோழ நாட்டுக் காவிரித் தென்கரைத் தலங்களில் 61-வது தலமாக எண்ணப் பெறுவது. சேந்தனார் திருவிசைப்பாப் பெற்றது. அருணகிரி நாதர் திருப்புகழும் பெற்று விளங்குவது.

இத்தலம் மயிலாடுதுறையிலிருந்து திருவாரூருக்குச் செல்லும் இருப்புப் பாதையில் உள்ள பூந்தோட்டம் புகை வண்டி நிலையத்திலிருந்து மேற்கே 10 கி. மீ. தொலைவில் உள்ளது. பேருந்து வசதிகள் உண்டு. திருவாரூர், கும்பகோணம் ஆகிய நகரங்களிலிருந்தும் பேருந்துகளில் இத்தலத்திற்கு வரலாம். இத்தலத்தில் சிவபிரான்

திருநாமம் - வீழியழகர் என்பது. அம்பிகை திருநாமம் சுந்தரகுசாம்பிகை (அழகிய மாமுலையம்மை) என்பது. விநாயகர் திருநாமம் - படிக்காசு விநாயகர். திருவுலா மூர்த்தி கல்யாணசுந்தரர்,

இத் தலத்தைப்பற்றிய தேவாரத் திருப்பதிகங்கள் சம்பந்தர் - 14, அப்பர் - 8. சுந்தரர் - 1 ஆக 23 உள்ளன. சேந்தனார் அருளிய திருவிசைப்பாப் பதிகமும் ஒன்றுள்ளது. திருமுறைகளில் இத்தலத்தில் திருமால் சக்கரம்பெற்ற வரலாறு பெரிதும்குறிக்கப்பெற்றமை காணலாம். திருவீழி மிழலைத் தலபுராணம் ஒன்று உண்டு. அதனை இயற்றியவர் ஸ்ரீ மெய்ஞ்ஞான முனிவர். இவர், திருவாவடுதுறை ஆதீனத்து இரண்டாவது குருமூர்த்திகள் ஸ்ரீ மறைஞான தேசிகருடைய மாணவர். திருமயிலாடுதுறை என்னும் மாயூரப் பதியினர். பரம்பரைச் சைவ வேளாளர். இதன் செய்யுட்டொகை - 678. இயற்றப்பட்ட காலம் கி.பி. 1651.

திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகளும் திருநாவுக்கரசு சுவாமிகளும் இங்கே தங்கியிருந்து வழிபட்டிருந்த திரு மடங்கள் இத்தலத்தில் வடக்கு வீதியில் உள்ளன. இத்தலத்தில் கல்வெட்டுக்கள் மிகுதியாக உள்ளன. இக் கோயிலிலுள்ள வௌவால்நத்து (வௌவால் நெற்றி) மண்டபம் பிரசித்தமானது. இத்திருப்பணி மிக்க அதிசய மான தென்பர். கோயில் திருப்பணி செய்யும் ஸ்தபதிகள் சில தலங்களில் உள்ள அரிய திருப்பணிகள் நீங்கலாகச் செய்யும் ஒப்பந்தங்களில் இம் மண்டபமும் ஒன்றாகும். தில்லை மூவாயிரவர். பெருந்துறை முந்நூற்றுவர் இவர்களைப்போன்று இத்தலத்திலே ஐந்நூறு அந்தணர் களுள் சிவபெருமானும் ஒருவராக உள்ளார்.

திருக்கயிலாயபரம்பரைச் சூரியனார் கோயில் ஆதீனத்துத் துவிதீய குருமூர்த்திகளாகிய வீழிச்சிவாக்கிர யோகிகள் இத்தலத்திலேயே சிவபரிபூரண முற்றார்கள். குருமூர்த்தமும், மடமும் இங்கே உள்ளன.

இத்தல சம்பந்தமாக அழகிய மாமுலையம்மை பிள்ளைத் தமிழ் என்ற ஒரு பிரபந்தமும் உண்டு; அச்சிட்ப் பட்டுள்ளது.

இத்தலம் திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனத்தின் அருளாட்சிக்கு உட்பட்டது.

கோயில் அமைப்பு :

திருக்கோயில் கிழக்கு நோக்கியது. சுவாமி அம்பாள் சந்நிதிகள் கிழக்கு நோக்கியவை. அம்பாள் கோயில் சுவாமி கோயிலுக்கு இடது பக்கம் உள்ளது. கோயிலுக்கு எதிரே விஷ்ணு தீர்த்தம் விளங்குகிறது. இராஜகோபுர நுழை வாயிலைக் கடந்தவுடன் இத்தலத் திருக்கோயிலுக்குப் பெருமை கூட்டும் வெளவால் நத்திமண்டபம் எனப்படும் திருக்கல்யாண மண்டபம் உள்ளது. நடுவில் தூண் இல்லாமல் அகலமான அமைப்பில் சுண்ணும்பு கொண்டு ஒட்டிய இம் மண்டபத்தின் அமைப்பை வியவாதவர் இல்லை.

ஆவுடையார்கோயில் கொடுங்கையும், திருவீழிமிழலை வெளவால் நத்திமண்டபமும், கடாரங்கொண்டான் திருமதிலும் கட்டிட வேலைப்பாடுகளுக்குச் சிறந்தவை எனக் கூறப்பெறும், சித்திரைத் திங்களில் இறைவனது திருக்கலியாண விழா இம்மண்டபத்தில்தான் நிகழும்.

இரண்டாம் கோபுரத்தைக் கடந்தவுடன் வெளித் திருச் சுற்றில் கிழக்கே திருஞானசம்பந்தருக்கு இறைவன் படிக்காசு அளித்த பலிபீடத்தையும், மேற்கே திருநாவுக் கரசர்க்குப் படிக்காசு வழங்கிய பலிபீடத்தையும், அருகில் படிக்காசு விநாயகரையும் திருஞானசம்பந்தர், திருநாவுக் கரசர் திருவுருவங்களையும் தரிசிக்கலாம்.

மூன்றாங் கோபுரவாயிலைக் கடந்தவுடன் முதற் பிரகாரம் உள்ளது. மாடக்கோயில் அமைப்பில் வீழிநாதர் திருக்கோயில் விளங்குவதைக் காணலாம்

தெற்குப் பிரகாரத்தில் தலவிநாயகரும், மேற்கே சோமாஸ்கந்தர், முருகன், மகாலட்சுமி முதலிய மூர்த்தி களும் வடக்குப் பிரகாரத்தில் சண்டேசுரரும் எழுந்தருளி உள்ளனர். ஈசானத்திசையில் விளங்கும் சபையில் நடராசர் எழுந்தருளியுள்ளார். திருமால் தெய்வ உலகிலிருந்து கொண்டுவந்து ஸ்தாபித்த இறைவனது விமானமாகிய விண்ணிழி விமானத்தை இப்பிரகாரத்தை வலம் வரும் போது நன்கு காணலாம். செப்புத்தகடுகள் வேயப்பெற்றுத் தங்கக் கலசத்தோடு விளங்கும் தனி அழகுடைய இவ் விமானம், ஏனைய கோயில்களின் விமானங்களிலிருந்து வேறுபட்டு விளங்குவது. திருஞானசம்பந்தர் இத்தலத்தில் வழிபாடாற்றிக் கொண்டு தங்கியிருந்த போது சீகாழிப் பெருமானைக் காணவிழைந்தார். பெருமான் சீகாழியில் விளங்கும் தமது திருக்கோலத்தை இத்தலத்தில் காட்டி அருளினார் என்பது வரலாறு. அதனைக் குறிக்கும் ஐதிகச் சிற்பங்கள் கர்ப்பக்கிருக விமானத்தில் உள்ளன.

**அரசாணிக்கால் :**

சுவாமி சந்நிதி கர்ப்பக்கிருகம், அர்த்தமண்டபம், மகா மண்டபம் முதலியவற்றோடு அழகுற அமைந்துள்ளது.

விண்ணிழி விமானத்தின் கருவறையில் மூலலிங்கமாகிய அருள்மிகு வீழிநாதேசுரர் எழுந்தருளியுள்ளார். சுவாமிக்குப் பின்புறம் இறைவன் பார்வதியோடு எழுருந்தருளி விளங்கும் திருமணக் கோலம் உள்ளது. வாயிலில் துவாரபாலகர்கள் உள்ளனர். இறைவன் உமையம்மையை மணம் புரிந்து கொண்ட தலம் என்பதற்கு ஏற்பச் கர்ப்பக்கிருகத்தின் வாயிலில் அரசாணிக்கால் எனப்படும் தூணும், வெளியில் உள்ள மகா மண்டபத்தில் பந்தற்கால் எனப்படும் தூணும் உள்ளன.

மகா மண்டபத்தின் தனி மண்டபத்தில் இத்தலத்தின் தனிச் சிறப்புக்குரிய 'மாப்பிள்ளை சுவாமி' எனப்படும் கலியாண சுந்தரர் விளங்குகிறார். சுவாமி உமையம்மையைத் தழுவிய நிலையில் விடையினருகில் மணவாளராய்க் காட்சி தருகிறார். பாதத்தில் திருமால் தனது கண்களில் ஒன்றை மலராகப் பறித்துச் சார்த்திய தாமரைமலர் விளங்குகிறது. இம் மண்டபத்தை அடுத்து பிக்ஷாடனர், காலசம்ஹார மூர்த்தி முதலியோர் எழுந்தருளியுள்ளனர்.

சுவாமி சந்நிதிக்கு அருகில் தியாகேசர் கையில் சக்கராயுதத்துடன் எழுந்தருளியுள்ளதை வழிபட்டு வடக்குப் பிரகாரத்தில் அமைந்துள்ள வாயில் வழியாக அம்பாள் சந்நிதியை அடையலாம். அருள்மிகு சுந்தர குசாம்பிகை அழகுக்கு ஒருவரும் ஒவ்வாத வல்லியாகத் திகழ்வதைக் காணலாம்.

**திருமால் சக்கரம் பெற்றது :**

திருக்கயிலாயத்தில் சிவபெருமான் பார்வதி சமேதராய்ச் சிவகணங்கள் புடைசூழ, திருநந்திதேவர் கையிற் பொற்பிரம்பு தாங்கி வழிவகுத்துப் பணிசெய்ய இரு

பக்கத்திலும் வேதங்களும் ஆகமங்களும் ஒலிக்க, தேவதுந்துபிகள் முழங்கத் திருக்கொலுவீற்றிருந்தருளுவாராயினர்.

அப்போது திருமால் சிவபெருமான் திருக்கோலத்தைத் தரிசித்து வழிபட்டுப் பெருமான் முன் ஒரு விண்ணப்பஞ் செய்வாராயினர். 'பெருமானே! என்னுடைய சக்கரம் மிகவும் வலிகுன்றியிருக்கிறது. ஆதலால் தேவரீர்! முன்னே சலந்தரனை வதைத்தருளிய சக்கரத்தை அடியேனுக்கு அநுக்கிரகிக்க வேண்டும்' என்று பெரிதும் போற்றினர். அப்போது பரமன் கருணைகூர்ந்து, 'நீ காவிரிக்குத் தெற்கே யுள்ள தேஜிநீவனம் என்னும் பெயரையுடைய தலத்தை அடைந்து நம்மைப் பூசிப்பாயாக' என்று திருவருள் புரிந்தனர். திருமால் உடனே விடைகொண்டு தென்றிசையை நாடிவந்தார். இத்தலத்தை அடைந்தார். பெருமானை வணங்கினர். தாமரைத்தடாகம் இயற்றக் கருதினர். காவிரி நதியை அழைத்தார். காவிரிநதியானது திருவலஞ்சுழிக்கு மேற்கே பிரிந்து அரிசொலாறு (அரிசில்) என்னும் பெயரோடு இத் திருவீழிமிழலையின் தென்றிசையை அணுகியது; பின்பு வடக்கு நோக்கிச் சுவாமி சன்னிதியில் க்ஷீரநதி (முட்டையாறு) யோடு சங்கமமாகிக் கிழக்கே சென்று கடலில் கலந்தது.

விஷ்ணு ஓர் தடாகம் (பத்மதீர்த்தம்) இயற்றிச் செந்தாமரைகளை யுண்டாக்கினர். பதினாறு சிங்கங்கள் தாங்குகின்ற விண்ணிழி விமானத்தை கொணர்ந்தார். பரமனை அதில் எழுந்தருளுவித்தார், தினந்தோறும் தீர்த்த புட்கரணியிலும் அரிசில் நதியிலும் நீராடி விபூதி உருத்திராக்க தாரணராய் விதிப்படி ஆயிரந்தாமரை மலர்களால் அருச்சித்து வழிபட்டு வந்தனர்.

இப்படி நாடோறும் ஆயிரந்தாமரை மலர்களால் பேராயிரமும் சொல்லி அருச்சனை செய்துகொண்டு வந்தார். ஒரு நாள் சிவபெருமான் அருளால் ஒரு பூக் குறைந்தது. மறுமுறையும் எண்ணிப்பார்த்தார். பின்னும் குறையக் கண்டார். இஃது இறைவன் திருவருள் என்று கருதினார். தாமரை மலருக்குப் பதிலாகத் தனது வலக் கண்ணைப்பறித்துத் திருவடியில் சாத்தினார். அப்போது சிவபெருமான் அன்புக் கெளியராய்த் திருமால்முன் தோன்றினார். சலந்தரனை வதைத்த சக்கரப்படையை அநுக்கிரகம் செய்தார். பின்பு திருமால் சிலகாலம் அங்கே தங்கி வழிபட்டிருந்தார். தன் பெயரால் ஓர் தீர்த்தம் (விஷ்ணு தீர்த்தம்) உண்டாக்கினார். அவர் வேண்டிய வரங்களைப் பெற்றுத் தன்னுலகு எய்தினார்.

## பிரமதேவர் வழிபட்டது :

பிரமதேவர் முன்னொரு காலத்தில் எல்லா உயிர் களையும் படைத்தார். அப்போது, பெண்களின் அழகில் ஒவ்வொரு எள் பிரமாணம் சேர்த்துவைத்து அதனை ஓர் பெண் வடிவமாகச் சிருட்டித்தார். அப்பெண்தான் திலோத்தமை யென்பவள். பிரமதேவர் அப்பெண்ணைக் கண்டு மயங்கினார், அப்பெண் அவரைத் தொட வொட்டாமல் பல திசைகளிலும் மறைந்து சென்றாள். பிரமன் எம்முயற்சியாலும் அணுக முடியாமல் இந்திரியத்தை விட்டுவிட்டார். அதனால் அப்பாவம் பிரமதேவரைச் சுற்றிக்கொண்டது. சிருஷ்டி சாமர்த்தியமும் பலிக்கவில்லை. அப்பாவத்தை விலக்கவும் முடியவில்லை. உடன் அகத்திய முனிவர் சொற்படி திருக் கயிலாயத்தை அடைந்து பெருமான்முன் வணங்கி விண்ணப்பித்தனர்.

இறைவன் பிரமனை நோக்கி, காவிரி நதிக்குத் தெற்கிலும், அரிசில் நதிக்கு வடக்கிலும் உள்ள தேஜிநீ வனத்தில் நம்மைப் பூசித்து, முன்னே திருமால் சலந்தரனை வதைத்த சக்கரத்தைப் பெற்றார். நீயும் அங்கே சென்று வழிபட்டு நம்மைப் பூசித்தால் இப்பாவமும் நீங்கிச் சிருஷ்டி சாமர்த்தியத்தையும் பெறுவாயென்று அருள்புரிந்தார்.

உடனே பிரமதேவர் இறைவனை வணங்கி விடைபெற்று இத்தலத்தை அடைந்து, தீர்த்த புட்கரணியிலும், அரிசில் நதியிலும் நீராடி விதிப்படி இறைவனைப் பூசித்து வருவாராயினர். பலநாள் அருச்சித்துத் தன் பெயரால் ( பிரம தீர்த்தம் ) ஓர் தீர்த்தமுண்டாக்கி, பாவம் நீங்கி சிருஷ்டி சாமர்த்தியத்தையும் பல வரங்களையும் பெற்றுத் தன்னுலகு எய்தினர்.

**ஸ்ரீ காத்யாயினி அம்பிகையின் திருமணம் :**

முனிவர்களிற் சிறந்தவராகிய காத்தியாயன முனிவர் இத்தலத்தை அடைந்து தீர்த்த புட்கரணிக் கரையில் ஓர் தவச்சாலை அமைத்துத் தினந்தோறும் தீர்த்தபுட்கரணியில் நீராடி அழகியமாமுலை அம்மையையும் வீழிநாதரையும் வழிபட்டுப் பன்னகசாலையில் தம் பத்தினியோடு அருந்தவம் புரிவாராயினர். அவருக்குப் புத்திரப் பேறின்மையால் அதைக்குறித்து அரிய வேள்விகளையும் செய்தார்.

அப்போது அம்பிகையானவள், இடக்கரத்தில் அன்ன பாத்திரமும், வலக்கரத்தில் அன்னம்படைக்கும் அகப்பை யோடும் அன்னபூரணியாகிக் காட்சியளித்து. ' அருந்தவ முனிவா ! நீ விரும்பிய வரம் யாது ? புகல்வாய் '' என்றனள். 'தாயே நீ புத்திரியாக வரவேண்டும்' என்றார். அவருக்கு அம்பிகை அவ்வரத்தைத் தந்தார்.

அம்பிகை பரமனிடத்தில் விடைபெற்று முனிவர் தவம்புரியும் பன்னகசாலைக்கருகேயுள்ள தீர்த்த புட்கரணியில் ஓர் சிறந்த பெரிய நீலோற்பல மலரில் அழகிய பெண் குழந்தை வடிவமாகத் திகழ்ந்தார். அதனை முனிவர் பத்தினியாகிய சுமங்கலை யென்பவள் கண்டு ஆனந்தங் கொண்டு அக்குழந்தையை எடுத்து மார்போடணைத்து காத்தியாயன முனிவரிடம் கொடுத்துக் காத்தியாயினி என்று பெயரிட்டு மிக மகிழ்ச்சியோடு வளர்த்து வருவாராயினர்.

காத்தியாயினிக்கு உரிய மணப்பருவம் வருவதை அறிந்து பரமனைக்குறித்து அருந்தவம் புரிந்தார். முனிவர் தவத்திற்கிரங்கிப் பரமன் வெளிப்பட்டார். இறைவன் திருவடிகளில் வணங்கிப் பெருமானே இக்கன்னிகையைத் தேவரீர் மணக்கோலத்தோடு வந்து திருமணங் கொண்டருள வேண்டுமென்று பிரார்த்தித்தார். பரமன் திருவுள மகிழ்ந்து நாம் சித்திரை மாதத்தில் மக நக்ஷத்திரத்தன்று திருமணங் கொண்டருளுவோமென்று அருள் புரிந்தார்.

இறைவன் முனிவருக்கு வாக்களித்தபடி சித்திரை மாதத்தில் மக நக்ஷத்திரத்தன்று ஸ்ரீ கயிலாயத்தினின்றும் எழுந்தருளித் திருமால் பிரமன் நந்தி முதலிய கணங்கள் புடைசூழ, சர்வாலங்கார ரூபராய்த் தென்திசை நாடித் திருவீழிமிழலையில் காத்தியாயன முனிவர் இருக்கும் இடத்தை அடைந்தார். காத்தியாயன முனிவர் இறைவனை எதிர் கொண்டு வணங்கித் திருமணத்திற்கு ஆவன செய்தார். மகா அலங்காரத்தோடு மிகச்சிறப்புற ஸ்ரீகைலாசபதிக்கும் காத்தியாயினி அம்பிகைக்கும் திருமண வைபவம் நடைபெற்றது.

பின்பு திருவீதி வலம்வந்து ஆலயத்துட் சென்றார்கள். அப்போது காத்தியாயன முனிவருக்கு ஓர் சந்தேகம் உதித்தது. அதாவது மணவாளராக வந்தவர் பரமன் தானோ வென்பது. அதனை அறிந்த இறைவன் அம்முனிவர் சந்தேகத்தை நீக்கும்பொருட்டு முன்னே திருமால் தாமரைப் பூவுக்குப் பதிலாக அர்ப்பணஞ்செய்த கண் மலரும், தொண்டராகிய மிழலைக்குறும்பர் நிவேதித்த விளாங் கனியும். சோதி வடிவமாக மணவாளக் கோலத்தோடு நின்ற பரமன் திருவடிகளில் வந்து வீழ்ந்தன. காத்தியாயன முனிவர் சந்தேகந் தீர்ந்து களிப்பினால் ஆனந்தக் கூத்தாடினார். பின்பு திருமால் பிரமன், காத்தியாயன முனிவர் முதலியவர்கள் இத்திருக்கோலத்தோடு என்றும் வீற்றிருந்தருள வேண்டுமென்று பிரார்த்தித்தனர். அவர்கள் விரும்பியபடியே மணவாளக்கோலத்தோடு இன்றும் என்றும் யாவரும் காண வீற்றிருந் தருளுவா ராயினர். முனிவர் வேண்டியதெய்தி இன்புற்றார்.

திருமணம் கைகூட :

உமையம்மை இறைவனைத் திருமணம்புரிந்துகொள்ளத் தவம் இருந்து தம் எண்ணம் ஈடேறப்பெற்றதலம் ஆதலால் திருமணம் ஆகாத பெண்கள் இத்தலத்திற்கு வந்து கல்யாண சுந்தரேசுவரருக்கு மாலை அணிவித்து, சுவாமி அம்பாளுக்கு அருச்சனை செய்து வழிபட்டு ஒரு மண்டலம் ( 45 நாள்கள் ) காலையில் எழுந்து நீராடி,

தேவேந் திராணி நமஸ்துப்யம்
தேவேந்திரப் பிரியபாமினி
விவாக பாக்யம் ஆரோக்யம்
புத்ரலாபம்சதேஹிமே
பதிம் தேஹி சுதம் தேஹி
சௌபாக்யம் தேஹிமேசுபெ

சௌமாங்கல்யம் சுபம் ஞானம்
தேஹிமே சிவ சுந்தரி
காத்யாயணி மகாமாயே
மகா யோக நிதீஸ்வரி
நந்த கோப சுதம் தேவம்,
பதிம்மே குருதே நம :

என்ற சுலோகத்தைப் பக்தியோடு அருள்மிகு கல்யாண சுந்தரேசுவரரை எண்ணி ஓதி வந்தால் திருமணம் கைகூடும் என்று இத்தல மான்மியம் கூறுகிறது.

சுவேதகேது இயமனை வென்றது :

வடதேசத்தில் சயந்தன் என்னும் ஓர் அரசன் மிக்க கீர்த்தியோடு அரசு செலுத்திவந்தான். அவனுக்குப்புத்திரப் பேறின்மையால் அருந்தவம்புரிந்து ஓர் ஆண் மகவைப் பெற்றான். அக்குழந்தைக்குச் சுவேதகேது எனப்பெயரிட்டு மிக அருமையாய் வளர்த்து வருங்கால் அக்குழந்தைக்கு அற்ப ஆயுள் என்று நூல் வல்லோர்கள் சொல்லக் கேட்டு அரசனும் மனந்தளர்ந்து 16–ஆவது வயதே அக்குழந்தைக்கு முடிவென்று கருதினான்.

பல முனிவர்களையும் பணிந்து இதற்கு உபாயம் எவ்வாறு என்று கேட்கவும் அதற்கு முனிவர்கள் காவிரி நதிக்குத் தென் திசையிலும் அரிசில்நதிக்கு வடக்கிலும் தேஜிநீவனம் ( திருவீழிமிழலை ) என்னும் ஓர் தலமிருக்கிறது. அங்கே பரமனைப் பூசித்துப் திருமால் சக்கரம் பெற்றார். பிரமன் பூசித்து வரம் பல பெற்றார். அத்தலத்தை அடைந்து பரமனை அன்போடு வழிபட்டால் காலமிருத்துவை வெல்லலாம் என்று முனிவர்கள் கூறிய படியே சுவேதகேதுவும் 16–ஆவது வயதுவந்ததும் இத்

தலத்தை அடைந்து தக்ஷிண காவிரியாகிய அரிசில் நதியிலும் தீர்த்த புட்கரணியிலும் நீராடிப் பூசைக்கான பொருள்களையுங் கொண்டு விதிப்படி தினந்தோறும் அன்போடு பூசித்துவந்தான். இப்படிப் பலநாட்கள் சென்றன. ஓர் நாள் பரமனைப் பூசிக்கும்போது இயம தூதுவர்கள் சுவேத கேதுவைக் கொண்டுபோகும்படி இயமதருமன் ஆணைப்படி இத்தலத்தை அடைந்து சுவேதகேதுவை அணுகினர். சுவேத கேதுவோ திருவெண்ணீறு துதைந்த மேனியும் உருத்திராக்கங்கள் தரித்த சரீரத்தையுமுடையவராய் உறுதியாகச் சிவபூசை செய்து கொண்டிருத்தலைக் கண்டார்கள். சுவேத கேதுவிடம் அவர்கள் அணுக அஞ்சி இதனைத் தமது தலைவராகிய இயம தருமராஜனிடம் விரைவில் சென்று தெரிவித்தார்கள்.

தர்மராஜன் பூவுலகில் என்னுடைய ஆணைக்கு மீறி இப்படியும் நடப்பதா என்று அதிக கோபங்கொண்டு தூதுவர்களுடன் சுவேதகேதுவிடம் விரைவாக வந்தான். சுவேதகேது சிவபூசையிலே மனத்தைச் செலுத்தி உறுதியோடு பரமனைப் பூசிப்பதையும் கருதாமல் காலபாசத்தை வீசினன். சுவேதகேதுவையும் இலிங்கததையும் சேர்த்து இழுத்தான். அன்புக்கெளியராகிய பெருமான் சிவலிங்கத்தினின்றும் திருவுருக்கொண்டு திருப்பாதத்தால் இயமனை உதைத்தார். இயமன் உயிர்துறந்தான். அதுகண்டு தேவர்களும் முனிவர்களும் இயமனைப் பிழை பொறுத்து உயிர்ப்பிக்க வேண்டும் என்று பிரார்த்தித்தார்கள்.

அப்போது சர்வ சக்திமானுகிய பெருமான் இயமனை உயிர் பெறச் செய்து சிவபூசை பண்ணும்போது அவர்களை நீ பிடிக்கலாகாது என்று கூறி இறைவன் அருள்புரிந்து திருவுருக் கரந்தார். சுவேதகேது பரமனருளால் சிரஞ்சீவியாய் வாழ்ந்து இன்புற்றுன்.

**சிபிவேந்தன் வழிபட்டது :**

உலகெல்லாம் ஒருகுடை நிழற்கீழ் அரசு செலுத்தும் வள்ளலாகிய சிபிச்சக்கரவர்த்தி இத்தலத்தை அடைந்து மிழலைப் பரமனை வழிபட்டுத் திருப்பணிகள் செய்து வேதாகமங்களை நன்குணர்ந் தொழுகும் ஐந்நூறு மறையவரைத் திருவீழிமிழலையிற் கொண்டுவந்து உறையுளும் விளை நிலங்களும் தானம்செய்தார். அப்போது பரமனே ஓர் மறையவர் கோலங் கொண்டு ஐந்நூற்று வரில் தானும் ஒருவராகத் தானம் வாங்கினார். அப்போது நாரதமுனிவர் தோன்றி அரசனைப்பார்த்து ஐந்நூற்றுவரில் ஒருவராகப் பரமனே தானத்தை வாங்குகிறார் என்று சுட்டிக் காட்டினார். பரமன் அந்தர்த்தானமானார். அரசனும் மிக்க மகிழ்வுற்றார்.

பின்பு சிபிவேந்தன் ஐந்நூற்றுவரைக் கொண்டு பரமனுக்கு நித்தியபூசையும் உற்சவாதிகளும் சிறப்புற நடத்துவித்து ஆலயத்துக்கு வேண்டிய எல்லாக் காரியங்களையும் செய்வித்து வரம்பல பெற்றுத் தன் பதியடைந்து இன்புற்றார்.

**புரூரவர் வழிபட்டது :**

வடநாட்டில் புரூரவசு என்னும் அரசரும் குடிகளும் மிகமகிழ்வோடு வாழ்ந்து வருங்கால் புரூரவருக்கு பத்திரவல்லி யென்னும் ஓர் மனைவி இருந்தார். அவளுக்கு குமரகண்ட நோய் ஏற்பட்டுப் பலகாலம் வருந்தினாள். அரசனும் அதற்குப் பல பரிகாரங்கள் செய்தும் அந்நோய் நீங்கவில்லை. அதனால் மனக்கவலையுற்றுப் பல முனிவர்களிடமும் வேண்டினார். முனிவர்கள் அரசனை நோக்கிக் காவிரிக்குத் தெற்கேயும், அரிசில்நதிக்கு

வடக்கேயும் உள்ள தேஜிநீவன க்ஷேத்திரத்தில் திருமால் பிரமன் முதலியவர்கள் வழிபட்டு இஷ்டசித்திகளைப் பெற்றார்கள். ஆதலால், நீயும் உன் மனைவியும் அங்கே சென்று இறைவனை வழிபட்டால், இந்நோய் நீங்குமென்று கூறினர். முனிவர்கள் கூறியபடி புரூரவரும் மனைவி பத்திர வல்லியும் இத்தலத்தை அடைந்தார்கள். அப்போது இத்தல ஆலயம், மதில்கள், கோபுரம், விமானம் முதலியவைகள் எல்லாம் பழுதுபட்டிருந்தமையால் ஆலயத்தைப் புதுப்பிக்க எண்ணி, சிற்பிகளை வரவழைத்து, வேலைசெய்ய ஆரம்பித்தார்.

அப்போது மூல லிங்கத்தினிடத்தில் எப்படி வேலை செய்வது என்று மனக்கவலையோடு இருந்தார். மிழலை நாதர் அரசர் கனவிற்றோன்றி கிழக்குப் பீடத்தருகே நாம் மேற்கு நோக்கி வீற்றிருப்போம். நந்தியும் கிழக்கு நோக்கி இருக்கும். தினந்தோறும் வேலை செய்யச் செய்ய உயர்ந்த நிலைக்கு வருவோம் என்று கூறினர். அரசன் கனவு நீங்கி ஆலயத்துட் சென்று பார்க்க, சுவாமி மேற்கு நோக்கியும் நந்தி கிழக்கு நோக்கியும் இருப்பது கண்டு திருவருளை வியந்து திருப்பணி செய்யச் செய்யப் பரமன் உயர்ந்த நிலைக்கு வந்ததும் வேலையைப் பூர்த்தி செய்து கோபுரம், திருமதில் முதலியவற்றையும் புதுப்பித்து பிரதிஷ்டை செய்து நித்திய நைமித்திகங்களை யும் வழுவறச் செய்தார். (கிழக்குப் பீடத்தருகேயுள்ள மூலட் டானம் மேற்கு நோக்கியும் நந்தி கிழக்கு நோக்கியும் இன்றும் உள்ளன) புரூரவரும் பத்திரவல்லியும் தெற்கு வீதிக்குத் தெற்கே பத்திரவல்லீச இலிங்கத்தைப் பிரதிட்டித்து அங்கே ஓர் தீர்த்தமுண்டாக்கி வழிபட்டு பத்திரவல்லியின் குமர கண்டநோய் நீங்கி இஷ்டசித்தி

களைப் பெற்றுத் தம்முடைய தேசத்தை அடைந்து இன்புற வாழ்ந்தனர். இத்தீர்த்தத்தில் அந்நோயுள்ளவர் மூழ்கி வழிபட்டால் இன்றும் நோய் நீங்குகின்றன.

## இரதிதேவிக்கு மன்மதனைத் தோற்றுவித்தது :

முன்னொரு காலத்தில் இறைவன் கல்லாலின் நிழற் கீழ் சனகர் சனந்தனர் சநாதனர் சனற்குமாரர் முதலிய நால்வருக்கும் உபதேசிக்கும்படி தக்ஷிணாபிமுகமாய் குரு மூர்த்தியாய் எழுந்தருளினார். முனிவர்கட்கு வாக்கினாற் சொல்லாமல், சின்முத்திரையால் ஞானோபதேசம் செய்தார் (ஒருக்ஷணப் பொழுதுதான்). பரமனுக்கு க்ஷணப்போது உலகுக்குப் பல கற்பங்கள் சென்றன. அதனால், எல்லா உயிர்களும் போக நுகர்ச்சியில்லாமல் ஏங்கின.

தேவர்களெல்லாம் கூடித் தவக்கோலத்தோடு வீற்றி ருக்கும் பரமன் தவத்தைக் கலைக்கும்படி மன்மதனை வேண்டினர். பரமன் தவத்தைக் கலைத்தால் தனக்குத் துன்பம் வருமென்று எண்ணினான். தேவர்கள் தவக் கோலத்தைக் கலைக்காவிடில் உலகியல் நடைபெறாது என்று வற்புறுத்தினார்கள். எப்படியும் உயிர்கள் வாழவேண்டுமே என்று ஒருவாறு ஒத்துக்கொண்டு மன்மதன் மறை முகமாக நின்று புட்பபாணங்களை எய்தான். பரமன் தவம்கலைந்து மன்மதனை நெற்றிக்கண்ணினால் நோக்கினார். அவன் சாம்பராயினான், இரதி தேவி இதனைக்கண்டு புலம்பி வருந்தினாள். பின்பு பரமன் திருவடிகளில் வீழ்ந்து வணங்கி, கணவனை உயிர்பெறச் செய்ய வேண்டுமென்று வேண்டினாள். அதற்குப் பரமன் தேஜிநீவனத்தை அடைந்து அங்கே வழிபட்டால் உனக்குக் கணவனைத்

தோற்றுவிப்போம் என்று அருளினர். பின்பு இரதிதேவி, இத்தலத்தை அடைந்து அம்பிகை சந்நிதியில் பலநாள் தவங்கிடந்தாள். பரமன் அவளுடைய தவத்துக்கு இரங்கி வெளிப்பட்டு மன்மதனைத் தோற்றுவித்து 'உன்னுடைய கண்களுக்கு மட்டும் அவன் உருவமாயிருப்பான். மற்றவர் கண்களுக்கு அவன் அருவமாகவே தோன்றுவான்' என்று அருள்புரிந்தார். இரதிதேவி தன் கணவனைப்பெற்று இன்புற்று வாழ்ந்திருந்தாள். இதனைச் சம்பந்தர் பதிகத்தில் 'கண்ணிற்கனலாலே' என்று கூறும் பாடலாலும் அறியலாம்.

**காமதேனு வழிபட்டது :**

வசிட்ட முனிவர் இத்தலத்தை அடைந்து வழிபடுங் காலத்துக் காமதேனுவும் இத்தலத்தை அடைந்து பரமனுக்குப் பாலினால் நிறைய அபிடேகித்துப் பூசித்தது. அபிஷேகித்த பால் பெருக்கெடுத்து க்ஷீரநதி எனப் பெயர் பெற்று (முட்டையாறு) அரிசில் நதியோடு சுவாமி சந்நிதியில் சங்கமமாயிற்று. அந்நதி சங்கமமாகிற காட்சி இன்றும் காண உள்ளது. காமதேனு வரம் பல பெற்றுத் தன் பதியை எய்தியது.

**மனு வழிபட்டது :**

ஒரு காலத்தில் மனுவானவர் தென்றிசை நாடித் திருவீழிமிழலையை அடைந்து அரிசில் நதியிலும் தீர்த்த புட்கரணியிலும் நீராடி விதிப்படி இறைவனைப் பூசித்து வேண்டிய வரங்களைப் பெற்றுத் தென்கீழ்த் திசையில் ஐங்குரோச தூரத்தில் ஒரு தவச்சாலையை அமைத்து அங்கே அருந்தவங்கள் புரிந்தார். அவ்விடத்தில் ஒரு சிவலிங்கத்தைப் பிரதிட்டை செய்து. ஒரு தீர்த்தமும்

உண்டாக்கி நித்திய நைமித்தியங்களையும் செய்தார். அவர் தவம்புரிந்த இடமானது இப்போதும் மனுதவச்சேரி யென வழங்குகின்றது.

**மிழலைக்குறும்பர் விளாங்கனி நிவேதித்தது:**

இத்தலமானது, தேஜிநீவனமாய் ( வீழிச்செடிக்காடு ) சந்தனம் சண்பகம் பலா விளா முதலிய பல விருக்ஷங்க ளடர்ந்த காடாய்ப் பலகாலம் இருந்தது. அப்போது மிழலைக்குறும்பர் என்னும் வேடுவர் ஒருவர் இருந்தார், அவர் பரமனைக்கண்டு ஆனந்தங்கொண்டு அன்போடு வழிபட்டுத் தினந்தோறும் விளாங்கனி நிவேதித்து வந்தார். இறைவன் அவர் முன் தோன்றி அருள்செய்தார். அதுமுதல் அவர் தவக்கோலம் கொண்டு அருந் தவங்களைச் செய்து பரமனை வழிபட்டு வந்தார். அவர் தவவலிமையால் அட்டமாசித்திகளையும் பெற்றார்.

அவர் நிவேதித்த விளாங்கனியானது பரமன் திருமணங் கொண்டருளிய காலத்துக் காத்தியாயன முனிவரின் சந்தேக நிவர்த்திக்காக மணவாளப்பெருமான் திருவடிகளில் சோதி வடிவாய்வந்து வீழ்ந்து முனிவர் சந்தேகத்தை நீக்கியது, அக்கனியுருவம் மணவாளப் பெருமான் திருவடிகளில் இன்றும் காட்சி அளிக்கின்றது.

**ஞானசம்பந்தரும், அப்பரும் படிக்காசு பெற்றது:**

திருஞானசம்பந்தரும், திருநாவுக்கரசரும் பல தலங் களையும் பணிந்துபாடித் திருப்பாம்புரம் திருச்சிறுகுடி பணிந்து இறைஞ்சித் திருவீழிமிழலையை நோக்கி வருவதைக் கேள்வியுற்று ஐந்நூற்று மறையவரும் மற்றை அடியார் களும் பூரண கும்பங்கள் ஏந்திப் பொற்சுண்ணமும் பொரியும் நறுமலரும் தூவி மகாலங்காரத்தோடு இருபெரு

மக்களையும் எதிர்கொண்டார்கள். மறையவர் வேத வொலியும், அடியவர்கள் செய்யும் அரகர ஒலியும் வானளப்பதாயின.

இருபெருமக்களும் ஆலயத்துட்சென்று இறைவனைப் பணிந்து இன்னிசைப்பாமாலைகள் சூட்டி இன்புற்றனர். பின்பு மறையவரும் மற்ற அடியார்களும் இருவருக்கும் மற்றையடியார்களுக்கும் அமுதூட்டி ஆவன செய்தார்கள்.

ஞானசம்பந்தரும் வாகீசரும் ஆலயத்துக்கு வடபக்கத்தில் திருமடங்களில் தங்கிக் காலந்தோறும் பரமனைப் பணிந்து பாடிப் பலநாள் தங்கியிருந்தனர்.

சில காலஞ்சென்றதும் அருவிலைக்காலமாகிய பஞ்ச காலம் வந்தது. அப்போது ஞானசம்பந்தரும் வாகீசரும் இக்காலத்தால் அடியார்களுக்கும் கவலை வருமோ வென்று கருதினர். வீழிமிழலைப்பெருமான் மான் மழுக் கரத்தோடும் இருவருடைய கனவிலுந்தோன்றி கால நிலைமையால் உங்கள் மனதில்வாட்டம் கொள்ளமாட்டீர்கள். ஆயினும், உங்கள் அடியார்களுக்காக நாடொறும் ஒரு பொற்காசு ஒவ்வொருவருக்கும் தருகின்றேம். அதுகொண்டு அமுதூட்டி இன்புறுவீர்களாக. பஞ்சம் நீங்கினதும் அக்காசு பெறுதல் இலையாகும் என்றருளினர். கனவு நீங்கிப் பெருமான் கருணையை வியந்து வைகறையில் ஆலயத்துட்சென்று ஞானசம்பந்தப் பெருமான் கிழக்குப் பீடத்துள்ள பொற்காசை எடுத்துக்கொண்டு வலமாக வரும் போது மேற்குப் பீடத்திலும் ஓர் காசு இருத்தலைக்கண்டு வாகீசப் பெருந்தகையாரும் எடுத்துக்கொண்டு அமுதாக்கு வாரிடத்தில் காசைக் கொடுத்து இக்காசுகொண்டு வேண்டிய பண்டங்களை வாங்கி அமுதமையுங்கள்

என்றார்கள். அவர்களும் ஆவண வீதியிற்சென்று வேண்டிய வற்றை வாங்கி அமுதமைத்தார்கள்.

பரமனடியார்கள் எல்லாரும் தினந்தோறும் நல் விருந்தாயுண்பதற்கு வருக வருகவென்று இரண்டு காலமும் பறைசாற்றி வருந்தொண்டர்களுக்கெல்லாம், திருவமுது கறிவகைகள், நெய், பால், தயிர், முதலியவற்றால் இரண்டு பொழுதும் திருவமுது ஊட்டினார்கள்.

சில நாட்கள் சென்றன, நாவுக்கரசர் திருமடத்தில் அடியவர்கள் காலத்தோடு அமுதருந்திச் செல்வதையும் தம்முடைய திருமடத்தில் கால தாமதத்தோடு அமுதருந்துவதையும் ஞானசம்பந்தர் உணர்ந்து பாகுகர்களை நோக்கி நீங்கள் காலத்தோடு அமுதருத்தாமைக்குக் காரண மென்ன வென்று கேட்டார். அதற்கு அவர்கள் தேவரீர் பெறுங் காசைக் கடைவீதிக்குக்கொண்டு சென்றால் நாவுக்கரசர் பெறுங்காசுக்கு உடனே கொடுக்கின்றார்கள், நம்முடைய காசுக்கு வட்டங்கேட்டுத் தீர்த்துப் பின்புதான் பண்டங் களைக் கொடுக்கின்றார்கள். அதனால் காலதாமதமாகிறது என்று கூறினர்.

ஞானசம்பந்தர் நாளைமுதல் நற்காசுபெற்றுத் தருகின் றோம்; காலத்தோடு அமுதமையுங்கள் என்று கூறினர், மறுதினம் ஆலயத்துட் சென்று 'வாசிதீரவே காசு நல்குவீர்', என்று திருப்பதிகத்தைப்பாடி நற்காசுபெற்று அதுமுதல் காலத்தோடு அமுதமைத்துப் பலகாலம் அமுதூட்டினார்கள்.

பின்பு மழை பெய்து எங்குஞ்செழித்துவிளைபொருள்கள் மிகுந்தன. ஞானசம்பந்தரும் வாகீசப்பெருமானும் பல தலங்களையும் வணங்கத் திருவுளம்கொண்டு மிழலைப் பெருமானிடத்தில் அருள்பெற்றுப் பிரியாவிடைகொண்டு

அரிதினீங்கித் திருவாஞ்சியம் முதலிய பல தலங்களையும் வணங்கித் திருமறைக்காட்டுக்கு எழுந்தருளினார்கள்.

இத்தலமானது அப்போது பெரிய நகரமாயிருந்தது. ஆவணவீதியானது இப்போதும் ஐயன்பேட்டையென வழங்குகிறது. அங்கே சுவாமி பெயர் செட்டியப்பர். அம்பாள் படியளந்தநாயகி, உற்சவமூர்த்தி தராசுபிடித்த கரத்தோடும் இருக்கின்றார். அம்பாள் படியைப்பிடித்த கரத்தோடும் இருக்கின்றார்.

அருவிலைக்காலத்தில் எண்ணிறந்த அடியார்களுக்கும் உணவிற்குவேண்டிய எல்லாப் பண்டங்களையும் ஒரு காசு பெற்றுத் தரவல்லவர் பரமனைத்தவிர எவரால் முடியும். இதனை இத்தலப் பிள்ளைத்தமிழ் விளங்கக்கூறும். அது வருமாறு.

**அழகியமாமுலை அம்மை பிள்ளைத்தமிழ் :**

அட்டதிக்கினுமுலகி லிடுசராசரமெலிந்
தாருயிர்பதைப்ப வாடி
அங்கமேசோர்ந்திடும் வறுமைவந்திடுங்
காலமவ்வினைவளர் கன்னலின்
கட்டுதீம்பால்கொழுங் கனிசெந்நெலன்
னங்களிப்பினொடு தொண்டருண்ணக்
கண்காட்சிபெறுபேட்டை கட்டிய நவநிதியமுங்
கணக்கில்பல சரக்குநிறையச்
செட்டியப்பாரென்று பேர்கொண்டு
விற்பதிற் சேர்வட்ட வாசிபார்த்துத்
தினமுமிப்படியுனது கணவன்விற்பனைசெயச்
செய்துதிகழ் சம்பந்தர்சொற்

சட்டமிகுமப்பர் சொற்பாடல்கொண்டருள்
செல்வி சப்பாணிகொட்டியருளே
தங்கப்படிக்காசு பங்கிட்டுவைத்தகிளி
சப்பாணி கொட்டியருளே.

**திருத்தோணி விமானக் காட்சி :**

திருஞானசம்பந்தப்பெருமான் இத்தலத்தில் தங்கிப் பல நாட்களாயினமையால் சீகாழியிலுள்ள அந்தணர்களும் அடியார்களும் ஞானசம்பந்தப்பெருமானைக் காணும்படி இங்கு வந்து சம்பந்தரையும், மிழலைப்பெருமானையும் தரிசித்தார்கள். ஐந்நூற்று மறையவர் சீகாழி மறையவர்களுக்கும் அடியார்களுக்கும் விருந்தளித்தார்கள்.

சீகாழி அந்தணர்கள் ஞானசம்பந்தப் பெருமானைத் தேவரீர் திருத்தோணிப்பெருமானைத் தரிசிக்க எழுந்தருள வேண்டுமென்று பிரார்த்தித்தார்கள். இன்று தங்கி மிழலைப் பெருமான் அருள்பெற்று நாளை வருவோமென்றனர். அன்றிரவு மிழலைப்பெருமான் சம்பந்தர் கனவிற்றோன்றி 'திருத்தோணியில் வீற்றிருந்த கோலத்தை இந்த விண்ணிழி விமானத்தில் காட்டுகின்றோம் காண்பாயாக, என்றருளினர். கனவு நீங்கி ஆலயத்துட்சென்று திருத்தோணிக்காட்சியைத் தரிசித்து காழியும் வீழியும் சேர்த்து 'மைம்மருபூங்குழல்' என்ற திருப்பதிகம்பாடி சீகாழியிலிருந்து வந்தவர்களை நோக்கி இறைவனருள் இன்னும் சில காலம் இங்குத்தங்கும்படி இருக்கிறது என்று கூறி விடை கொடுத்து அனுப்பினார்.

**இத்தலத்தைச்சேர்ந்த பஞ்சக்குரோசத் தலங்கள் :**

**1. வசிட்டேச்சுரம் :**

இத்தலத்துக்கு வடகீழ்த்திசையில் ( வடுகக்குடியில் ) கீர்த்திமான் ஆற்றுக்குக் கீழ்கரையில் திடலில் மூர்த்தி

இலிங்கம் மாத்திரம் காணப்பெறுகின்றது வசிட்டதீர்த்தம்; தீர்த்தம் வயல்வடிவாக உள்ளது.

2. இந்திரேச்சுரம் :

கட்கம்பாடியில் ஆலயமாகவே உள்ளது. இந்திர தீர்த்தம் வயல்வடிவாக உள்ளது.

3. மனுவழிபட்ட இலிங்கம் :

மனுதபச்சேரியென வழங்குகிறது; மனுலிங்கம், ஆலயமாகவே உள்ளது, மனுதீர்த்தம் தீர்த்தமாகவே உள்ளது.

4. கௌதமேச்சுரம் :

தென்கீழ்த்திசையில் சம்பந்தன் பாடித்திடலில் இலிங்கம் மாத்திரம் இருக்கிறது. தீர்த்தம் வயலாக உள்ளது.

5. காலேச்சுரம் :

தெற்கே கள்ளிக் குளத்தங்கரையில் இருந்தது. தற்போது விஷ்ணுபுரம் தர்ம குளத்தங்கரையில் இருக்கிறது; ஆலயமாகவேயுள்ளது. தீர்த்தம் – தீர்த்தமாகவேயுள்ளது.

6. வருணேசம் :

நாலாங்கட்டளையில் அரிசிலாற்றுக்கு மேல்கரையில் இலிங்கம் மாத்திரம் இருக்கிறது. தீர்த்தம் காண முடியவில்லை.

7. மார்க்கண்டேச்சரம் :

இது முதற்கட்டளையில் ஆலயமாகவே இருக்கின்றது. தீர்த்தம் – தீர்த்தரூபமாகவே உள்ளது.

8. **நூபரேச்சுரம் :**

இது செம்பங்குடியில் ஆலயமாகவே இருக்கின்றது. தீர்த்தம் உள்ள இடம் அறிய முடியவில்லை.

9. **அபிமுத்தேச்சுரம் :**

மேற்கே தாமரைக் குளத்தங்கரையில் ஆலயமாகவே உள்ளது. தீர்த்தம் அரிசில்நதி.

10. **பத்திரவல்லீச்சுரம் :**

தெற்கே ஆலயமாகவுள்ளது. தீர்த்தம் பெரிய கிணருகவுள்ளது.

11. **சுவர்க்காவதாணேச்சுரம் :**

இது காத்தாயி அம்மன் கோயிலுக்கருகில் இருந்தது. தற்போது பத்திரவல்லீசர் ஆலயத்தில் இருக்கிறது. வடக்கு வீதியில் திருஞானசம்பந்தரும் திருநாவுக்கரசரும் தங்கிய திருமடத்தில் தனித்தனி ஆலயமாகவே இருக்கிறது. மூர்த்திகள், திருமூலட்டானம், மாயூரநாதர், மத்தியார்ச்சுனேசர், அண்ணமலையார், பிரமலிங்கம், தியாகராஜர் இன்னும் பல இலிங்கங்களும் உள்ளன.

**உற்சவமூர்த்திகள் :**

நடராஜர், சோமாஸ்கந்தர், சந்திரசேகரர், சக்கரதானர், பிக்ஷாடனர், காலசம்ஹாரர், சுவர்க்காவதாணேசர், நாயன்மார்கள் முதலிய பல மூர்த்திகள் இருக்கின்றனர்.

தலவிருக்ஷம் ஒவ்வொரு யுகத்துக்கும் ஒவ்வொன்ருகவுள்ளது. முதல் யுகத்தில்-சநதனம். 2-ஆவது யுகத்தில் - சண்பகம் 3-ஆவது யுகத்தில் - வீழிச்செடி. 4-ஆவது யுகத்தில் - பலாவிருக்ஷம்.

**தீர்த்தங்கள் :**

புட்கரணி தீர்த்தம், விஷ்ணு தீர்த்தம், பிரம தீர்த்தம், திருவேணி சங்கமம், பத்மதீர்த்தம், இந்திர தீர்த்தம், இமய தீர்த்தம், வருண தீர்த்தம், குபேர தீர்த்தம் கௌதம தீர்த்தம், மார்க்கண்ட தீர்த்தம், விசுவாமித்திர தீர்த்தம், காயத்திரி தீர்த்தம், சாவித்திரி தீர்த்தம், சரஸ்வதி தீர்த்தம் இலக்குமி தீர்த்தம், பூமிதேவி தீர்த்தம், உருத்திர தீர்த்தம், கபில தீர்த்தம், பத்திரவல்லி தீர்த்தம், பார்வதி தீர்த்தம், மனு தீர்த்தம், வசிட்ட தீர்த்தம், அபிமுக்த தீர்த்தம், சமுத்திர தீர்த்தம் என இருபத்தைந்து தீர்த்தங்கள் உள்ளன.

இதில்,

| | |
|---|---|
| புட்கரணி தீர்த்தம் | — சுவாமி சந்நிதியில் உள்ளது. |
| விஷ்ணு தீர்த்தம் | — மேற்கு மதிலைச் சார்ந்துள்ளது |
| பிரம தீர்த்தம், பத்ம தீர்த்தம் | — இரண்டும் சேர்ந்து மேற்கே தாமரைக் குளமாயுள்ளது. |
| இமய தீர்த்தம் | — தெற்கே கள்ளிக்குளம் என்பது |
| மார்க்கண்ட தீர்த்தம் | — முதற்கட்டளையிலிருக்கிறது |
| பத்திரவல்லி தீர்த்தம் | — ஷை ஆலயத்தில் பெரிய கிணறுயுள்ளது. |
| மனு தீர்த்தம், அபிமுக்த தீர்த்தம் | — இவ்விரண்டும் மருதவஞ் சேரியிலுள்ளன |
| திருவேணி சங்கமம் | — கிழக்கே சுவாமி சந்நிதியில் க்ஷீர நதியும் (முட்டையாறு) அரிசில் நதியும் சங்கமமாகிற இடம் |
| சமுத்திர தீர்த்தம் | — காரைக்காலில் கடலில் அரிசில் நதி சங்கமமாகிற இடம் |
| மற்றைய தீர்த்தங்கள் | — தீர்த்த உருவமாகக் காணப் பெறவில்லை, |

# திருவீழிமிழலை ஆலயக் கல்வெட்டுகள்

இவ்வாலயத்தில் உள்ள கல்வெட்டுகளில் 97 கல்வெட்டுகள் தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறையினரால் படி எடுக்கப்பட்டு 'திருவீழிமிழலைக் கல்வெட்டுகள்' என்ற நூலாக வெளியிடப்பட்டுள்ளது. இக்கல்வெட்டுகளில் இவ்வாலயம் 'திருத்தான்தோன்றி ஆழ்வார்' கோயில், திருவீழி மிழலை உடையார் கோயில், எனக் கூறப்பட்டுள்ளது. படி எடுக்கப்பட்டுள்ள கல்வெட்டுகள் பிற்கால சோழர்கள், பாண்டியர்கள், விஜயநகர மன்னர் காலத்தவை.

## சோழர் காலக் கல்வெட்டுகள்

| | | | கி, பி. | கல்வெட்டுகள் |
|---|---|---|---|---|
| i. | பராந்தக சோழன் | I | 907-955 | 5 |
| ii. | இராஜராஜன் | I | 985-1014 | 8 |
| iii. | இராஜேந்திரன் | I | 1012-1044 | 2 |
| iv. | இராஜாதிராஜன் | I | 1018-1054 | 4 |
| v. | குலோத்துங்கன் | I | 1070-1120 | 8 |
| vi | விக்ரமசோழன் | | 1118-1135 | 8 |
| vii. | குலோத்துங்கன் | II | 1133-1150 | 4 |
| viii. | இராஜராஜன் | II | 1146-1173 | 1 |
| ix. | இராஜாதிராஜன் | II | 1163-1166 | 2 |
| x. | குலோத்துங்கன் | III | 1178-1216 | 8 |
| xi. | இராஜராஜன் | III | 1216-1253 | 13 |
| xii. | இராஜேந்திரன் | III | 1246-1279 | 4 |
| xiii. | பாண்டியர்கள் | | | 5 |
| xiv. | விஜயநகர மன்னர்கள் | | | 2 |
| xv. | அரசர்கள் பெயர் தெரியாதன | | | 23 |
| | | | மொத்தம் | 97 |

முதலாம் பராந்தக சோழன் காலத்திற்கு முற்பட்ட கல்வெட்டுகள் இல்லாததால் அவன் காலத்தில்தான் இவ்வாலயம்

கற்றளியாக மாற்றப்பட்டிருக்கலாம். பல கல்வெட்டுகள், இவ்வாலயத்திற்குப் பலர் நிவந்தங்கள் அளித்ததையும் இறையிலி நிலங்கள் அளித்ததையும் தெரிவிக்கின்றன. கல்வெட்டுகளில் காணப்படும் சில சுவையான செய்திகள்.

i. முதலாம் குலோத்துங்கன் - உண்ணாழி மேற்றப்புற அதிட்டானப்பட்டி :

நகரத்தார் அனைவரும் சேர்ந்து பெருமான் திருமேனியை கல்யாணத் திருமேனியாக்குவதற்கும், இவர்க்கு வேண்டிய நெய்யமுது, தயிரமுது, அடைக்காயமுது, திருப்பரிசட்டம். திருவிளக்கு எண்ணெய், சந்தனம், திருவிழா முதலியவற்றிற்கு நன்கொடை அளித்தனர்.

ii. முதலாம் இராஜாதிராஜன் - உண்ணாழி மேற்குப்புறச் சுவர்.

இவ்வரசனின் 31-ஆவது ஆட்சி ஆண்டில் திருவீழிமிழலை மகாதேவர்க்கு தேவதானமாக நிலம் அளித்ததை இவ்வூர் சபையார் திருவீழிமிழலை நிலத்திலிருந்து தனியாகப் பிரித்து ஜெயங்கொண்ட சோழநல்லூர் எனப் பெயரிட்டு, எல்லை வகுத்து அவ்வெல்லைகளை ஒரு பெண் யானையைக்கொண்டு சுற்றி நடக்கச்செய்து எல்லைகளில் கல்லும் கள்ளியும் நாட்டி எல்லை நிர்ணயம் செய்த ஓலையைக் கொடுத்தனர். இந்த நிலத்தில் காவும், தெங்கும், மாவும், இருவாட்சியும், செண்பகமும், செங்கழுநீரும் பலாவும், கமுகும் பயிரிட உரிமை தரப்பட்டது.

iii. மூன்றும் குலோத்துங்கன் - மூன்றும் திருச்சுற்றுக் கிழக்குப்புறச் சுவர் :

உடையார் திருவீழிமிழலை உடையார் கோயில் பிரகாரத்தில் உள்ள பார்வதீஸ்வர முடையார் கோயில் நிர்வாகத்தார் திருவீழிமிழலையில் உள்ள மற்றொரு கோயிலான திருச்சுவர்க்க

முடையார் கோயிலுக்குத் திருநாமத்துக் காணியாக நிலம் விற்றுக் கொடுத்தனர். இக்கல்வெட்டிலிருந்து சுவர்க்கமுடையார் கோயில் என்றொரு வேறு ஒரு கோயில் இவ்வூரில் இருந்ததை அறிய முடிகிறது.

## iv. மூன்றும் இராஜராஜன் - மூன்றும் திருச்சுற்றுத் தென்சுவர்.

இவ்வரசனின் பதினோராம் ஆட்சிஆண்டில் திருவீழிமிழலைக் கோயிலில் உள்ள ஆண்டார்களில் ஒருவரான சுந்தரப்பெருமாள் என்பவர் இவ்வாலயத்தின் மூன்றும் பிரகாரத்தில் எழுந்தருளியுள்ள திருவாதவூர்தேவர்க்கு (மாணிக்கவாசகர்) நிலம் கொடுத்தார். இவ்வாலயத் தேவரடியார்களுக்கு வழங்கப்பட்ட படிசோற்றில் (படியரிசி) சிவப்பிராமணர்கள் இருநாழி அரிசியைப் பிடித்து அமுது செய்துவந்தனர். இச்செயல் தவிர்க்கப்பட்டது.

## v. மூன்றும் குலோத்துங்கன் - மூலநாதர் சந்நிதி கிழக்குச் சுவரில் உள்ளது

திருவீழிமிழலை உடையார்க்கு முதலாம் இராஜாதிராஜன் காலத்தில் தேவதானமாக அளிக்கப்பட்ட ஜெயங்கொண்ட சோழநல்லூரில் உள்ள விளைநிலங்களுக்கு கீர்த்தி மார்த்தாண்ட பேராற்றிலிருந்து (கீர்த்திமான் ஆறு) ஒரு துளை அமைத்து (வாய்த்தலை) பட்டாலிவதி என்ற வாய்க்கால் மூலம் நீர் கொண்டுவரப்பட்டது. இந்தத் துளை மணல்மேடிட்டு பட்டாலிவதி வாய்க்காலில் தண்ணீர் பாய்வது நின்றுவிட்டது. பல்லவராயன் வேண்டுகோளுக்கு இணங்க அரசன் அன்னியூரில் உள்ள திருநாமத்துக்காணி நிலத்திற்கு அருகில் கீர்த்திமார்த்தாண்ட ஆற்றில் வேறொரு துளை அமைத்து ஒரு வாய்க்கால் வெட்டி அவ்வாய்க்கால் மூலம் வரும் நீரை அன்னியூருக்கும் மணிநாகன் குடிக்கும் வரும் வாய்க்காலில் விழச்செய்து, அதிலிருந்து

பட்டாலி வாய்க்காலில் நீரை விழச்செய்து ஜெயங்கொண்ட சோழநல்லூர் விளை நிலங்களுக்கு, பாசன வசதி செய்துகொடுக்க ஆணை பிறப்பிக்கப்பட்டது.

vi. ஆலய மகாமண்டபம் தென்புறவாயில் வலதுபக்க நிலை - கி. பி. 10-ஆம் நூற்றாண்டுக் கல்வெட்டு - அரசன் பெயர் தெரியவில்லை.

திருமாளிகைத் தேவர் என்பவர் இவ்வாலயத்திற்கு நுந்தா விளக்கு வைத்த செய்தியைத் தெரிவிக்கிறது. இக்கல்வெட்டின் சம்ஸ்கிருத பகுதி திருமாளிகைத் தேவரை ஐயந்தன் என்ற சிவஞானி எனக் குறிப்பிடுகிறது.

vii. அம்மன் சந்நிதி வடக்கு வரிசைத்தூண் - அரசன் பெயர் தெரியவில்லை.

பழுவேட்டரையர் நம்பிகண்டன் என்பவர், திருவீழிமிழலைத் தொண்டன் என்ற அடியார் மூலம் 15 காசுகளுக்கு நிலம்வாங்கி உமைநங்கை நந்தவனம், திருத்தான்தோன்றி பட்டாரகர் நந்தவனம் என இரண்டு நந்தவனங்களை அமைத்த செய்தி கூறப்பட்டுள்ளது.

viii. இரண்டாம் குலோத்துங்கன், ஆலயத்தின் மூன்றும் திருச்சுற்று கிழக்குச் சுவரில் உள்ளது.

அரசனின் மூன்றும் ஆட்சி ஆண்டில் திருநாட்டியத்தான் குடி கோட்புலியாண்டார் என்பவர் விக்ரமசோழனின் ஆளும் ஆட்சியாண்டில் அன்னியூரைச்சேர்ந்த மூவரிடம் நிலம் விலைக்கு வாங்கி இறையிலிமடப்புறம் செய்வதற்கு நாற்பது காசுகள் கொடுத்ததாகவும், அவர்கள் இறையிலி செய்து தருவதில் கால தாமதம் செய்ததால் கோட்புலியார் மகேஸ்வரர்கள் கூடும் இடங்களுக்கெல்லாம் சென்று அன்னியூரார்களை பழித்துக் கூறி வந்ததாகவும், அதனைப் பொறுக்காத அன்னியூரார்கள் மடப் புறம் இறையிலி செய்துகொடுத்ததாகவும், அந்த நிலத்தி



141 SATHYA NARAYANA POOJA

VIDHYA ENTERPRISES
21, EAST CAR ST.,
SIVAKASI.

லிருந்து வரும் வருமானத்தைக்கொண்டு திருவிழாவிற்கு வரும் அடியார்களுக்கு இரண்டு நாட்கள் உணவு அளிக்க வேண்டும் என்றும், அன்னியூர் திருவகத்தீஸ்வரமுடையார் திருப்பணிக்கு 10 காசுகள் ஒடுக்கித் தரவு கொள்ள வேண்டும் என முடிவு செய்யப்பட்டது.

### ix. மூன்றும் இராஜராஜன் - ஆலயத்தின் மூன்றும் திருச் சுற்றுத் தெற்குப்புறச் சுவர்:

*அரசனின் 21-ஆவது ஆண்டில் சுவாமி தேவர் என்பவர் 'கூழைக்கா' என்ற நிலத்தை 'தூமொழி ஞானசம்பந்தன்' என்ற பெயரில் நந்தவனம் அமைத்து, நூறு திருப்பள்ளித் தாமம் ஆக்கி அக்கோயிலில் உள்ள குகையில் திருத்தொண்டர் களுக்கு அணிய ஏற்பாடு செய்யப்பட்டது.*

### x. மூன்றும் இராஜேந்திரசோழன் – ஆலய மூன்றும் திருச்சுற்றுச் சுவர்.

*அரசனின் 12-ஆவது ஆட்சியாண்டில் கோட்டூர் முதலியார் என்ற சிவனடியார் ஆலயத்தின் திருமடை வளாகத்திற்கு வடக்கில் திருவீதியின் வட சிறகில் திருத்தொண்டத்தொகை யான் மடம் என்றதை எடுப்பித்து அதற்கு மனை, நிலம் வாங்கிய செய்தியும் முதலியார் நியமித்த ஒருவர் மடத்தில் இருக்கவும், திருமுறை ஓதுவார் ஒருவர் இருக்கவும் ஏற்பாடு செய்த செய்தி கூறப்பட்டுள்ளது.*

### xi. மூன்றும் இராஜேந்திரசோழன்-மூன்றும் திருச்சுற்று மேற்குச் சுவர்:

*திருநறையூர் நாட்டு இராஜராஜபுரத்தில் உள்ள திருச்சத்தி முற்றமுடையார் கோயில் கீழைத் திருமடவிளாகத்தில் உள்ள திருஞானசம்பந்தர் மடத்தில் பூஜைசெய்துவந்த மாருதிப்*

பெருமாள் சந்தானத்து திருச்சத்தி முற்ற முதலியாரின் தொண்டர்களில் ஒருவரான தவப்பெருமாள் என்ற ஞான சிவன் திருவீழிமிழலை ஆலயத்தின் தெற்கில்திருமடைவளாகத்து திருமஞ்சன ஒடுக்கைக்கு ( சந்து ) கிழக்கே அழகிய திருச்சிற்றம் பலமுடையார் திருமடம் என்ற மடத்தை அமைத்தார் என்ற செய்தி கூறப்பட்டுள்ளது.

## xii. சடையவர்மன் சுந்தரபாண்டியன் - மூன்றும் திருச் சுற்று மேற்குச் சுவர்.

இவ்வரசனின் 8 - ஆம் ஆட்சி ஆண்டில் அகளங்கநாடாள் வான் என்பவனின் வமிசத்தில் வந்த ஒருவன் இவ்வூரில் உள்ள நான்கு மடத்திலும் உள்ள அடியார்களுக்கும், ஓதுவார்களுக் கும், திருத்தொண்டு செய்வார்களுக்கும், நாற்பத்தெண்ணு யிரம் பிள்ளைகளுக்கும், பூஜை பண்டிதன் ஒருவனுக்கும் நிலமும் மனையும் கொடுத்த செய்தி கூறப்பட்டுள்ளது.

## xiii. மூன்றாம் குலோத்துங்கன்-மூலநாதர் தெற்குச்சுவர்.

இக்கோயிலில் உள்ள ஆண்டார் ஒருவர் வடக்கு மடவிளா கத்தில் திருநாவுக்கரசு என்ற பெயரில் குகை (மடம்) ஒன்று எடுப்பதற்காக மனை வாங்கும்போது தன் பெயரிலும், திருவீழி மிழலையுடையார் பெயரிலும் நிலம் வாங்க இயலாததால் வாதுசெய் நம்பியான திருஞானசம்பந்தர் பெயரில் பலரிடம் நிலம் வாங்கப்பட்ட செய்தியைத் தெரிவிக்கிறது.

## xiv. ஆலயத்தின் இரண்டாம் கோபுரம் வடபுறச் சுவர்- 18, 19 ஆம் நூற்றாண்டுக் கல்வெட்டு,

இவ்வடபுறச் சுவர் கூந்தலூரைச் சேர்ந்த எல்லப்பன் என்பவரின் மகன் நாகப்பன் கட்டித் தந்துள்ளதாக அறிய முடிகிறது.

XV. முதலாம் இராஜேந்திரன் - சுந்தரகுஜாம்பிகை சந்நிதி வடக்கு வரிசை முதல் தூண்.

இவ்வரசனின் 10-ஆவது ஆட்சி ஆண்டில் இராஜேந்திர சோழன் அணுக்கப் பல்லவரையன் என்பவனது தாயார் சீதேவி என்பவர் அழகியமணவாளர் (கல்யாணசுந்தரர்) திருமேனியை எழுந்தருளுவித்து அதற்கு கொடுத்த செய்தியைத் தெரிவிக்கிறது. இதே தூணில் உள்ள மற்றொரு கல்வெட்டு பாம்பூர் நாட்டுக்கோனார் காளி ஆதிச்சனை செம்பியன் என்பவன் இவ்வூர் சபையாரிடம் 1500 கலம் நெல் கொடுத்து அதன் பொலிசையால் திருவீழிமிழலை தேவர்க்கு மூன்று சந்தியும் திருவமுது செய்யவும், இக்கோயிலில் உள்ள கிருஷ்ணர்க்கு திருவமுது செய்யவும் அவன் பிறந்த நாளான புரட்டாசி மாதம் ரேவதி நாளன்று திருவிழா செய்யவும் ஏற்பாடு செய்த செய்தி கூறப்பட்டுள்ளது.

XVi. முதலாம் இராஜராஜன் - திருவீழிநாதர் உண்ணாழி வடபுறச் சுவர்:

பல்லவன் பட்டாலி நங்கையார் என்ற அணுக்கி தன்பெயரால் எடுப்பித்த பட்டாலி ஈஸ்வரம் உடைய மகாதேவருக்கு 128 கழஞ்சு 4 மஞ்சாடி குன்றிதானம் அளித்து திருவீழிமிழலை உடையார் கோயில் பண்டாரத்தில் வரவுவைக்கப்பட்டு அதன் மூலம் கிடைக்கும் 144 கலம் நெல்லை பட்டாலி ஈஸ்வரம்உடைய மஹாதேவருக்கு நீராட்டுவிழா தொடர்பாக செலவுசெய்யப் படவேண்டும் என்பதைத் தெரிவிக்கிறது.

XVii. இவ்வூர் கீழவீதி தேர்முட்டி மண்டப மேல்சுவர்.

இத்தேர்முட்டி மண்டபத்தை கி. பி. 1810ல் பழியஞ்சிய நல்லூர் இராமலிங்க நயினாரின் மகளும் திருவீழிமிழலை வீழிநாத நயினாரின் மனைவியுமான சிவப்பி நாச்சியார் என்பவர் கட்டிக் கொடுத்த செய்தியைத் தெரிவிக்கின்றது

உ

சிவமயம்

# திருவீழிமிழலைத் தேவாரம் முதலியன

திருச்சிற்றம்பலம்

**திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள் - 1 - ஆம் திருமுறை**

வாசிதீரப்பாடியது

வாசி தீரவே, காசு நல்குவீர்
மாசின் மிழலையீர், ஏச லில்லையே.
காழி மாநகர், வாழி சம்பந்தன்
வீழி மிழலைமேல், தாழும் மொழிகளே

**2 - ஆம் திருமுறை :**

இரதிதேவிக்கு மன்மதனைத் தோற்றுவித்தமை

கண்ணிற் கனலாலே காமன் பொடியாகப்
பெண்ணுக் கருள்செய்த பெருமா னுறைகோயில்
மண்ணிற் பெருவேள்வி வளர்தீப் புகைநாளும்
விண்ணிற் புயல்காட்டும் வீழி மிழலையே.

**3 - ஆம் திருமுறை :**

காத்தியாயனியின் திருமணம்

பூதபதி யாகியபு ராணமுனி புண்ணியநன் மாதைமருவிப்
பேதமதி லாதவகை பாகமிக வைத்தபெரு மானதிடமாம்
மாதவர்க ளன்னமறை யாளர்கள்வ ளர்த்தமலி வேள்வியதனால்
ஏதமதி லாதவகை யின்பமமர் கின்றவெழில் வீழிநகரே.

**திருநாவுக்கரசு சுவாமிகள் — 4 - ஆம் திருமுறை :**

திருமால் சக்கரம் பெற்றது

நீற்றினை நிறையப் பூசி நித்தலா யிரம்பூக் கொண்டு
ஏற்றுழி யொருநா ளொன்று குறையக்கண் ணிறையவிட்ட
ஆற்றலுக் காழிநல்கி யவன் கொணர்ந்திழிச்சுங் கோயில்
வீற்றிருந் தளிப்பர் வீழி மிழலையுள் விகிர்தனாரே.

5-ஆம் திருமுறை

சுவேதகேது இயமனை வென்றது

பழகி நின்னடி சூடிய பாலனைக்
கழகின் மேல்வைத்த காலனைச் சாடிய
அழக னேயணி வீழி மிழலையுள்
குழக னேஅடி யேனைக் குறிக்கொளே.

6-ஆம் திருமுறை :

மணவாளக்கோலத்தை வியந்தது

நெய்யினொடு பாலிளநீ ராடி னான்காண்
நித்தமண வாளனென நிற்கின் றான்காண்
கையின்மழு வாளொடுமா னேந்தி னான்காண்
காலனுயிர் காலாற் கழிவித் தான்காண்
செய்யதிரு மேனிவெண் ணீற்றி னான்காண்
செஞ்சடைமேல் வெண்மதியஞ் சேர்த்தி னான்காண்
வெய்யகனல் விளையாட் டாடி னான்காண்
விண்ணிழிதண் வீழி மிழலை யானே.

சுந்தரமூர்த்திசுவாமிகள் — 7 - ஆம் திருமுறை :

சிங்கஞ்சுமந்த விண்ணிழி விமானச் சிறப்பு

விடங்கொண் மாமிடற் றீர்வெள்ளைச்சுரு ளொன்றிட்டுவிட்ட
[ காதினீரென்று
திடங்கொள் சிந்தையினார் கலிகாக்குந் திருமிழலை
மடங்கல்பூண்டவிமான மண்மிசைவந்திழிச்சிய வானநாட்டையும்
அடங்கல் வீழிகொண்டீர் அடியேற்கும் அருளுதிரே.

மாணிக்கவாசகசுவாமிகள் - 8-ஆம் திருமுறை :

திருமால் சக்கரம் பெற்றது

பங்கயம் ஆயிரம் பூவினிலோர் பூக்குறையத்
தங்கண் இடந்தரன் சேவடிமேற் சாத்தலுமே
சங்கர னெம்பிரான் சக்கரமாற் கருளியவா(று)
எங்கும் பரவி நாந்தோணோக்க மாடாமோ.

சேந்தனூர் திருவிசைப்பா - 9-ஆம் திருமுறை :

கற்றவர்விழுங்குங் கற்பகக்கனியைக்
கரையிலாக் கருணைமா கடலை
மற்றவரறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கைச்
செற்றவர் புரங்கள்செற்ற எஞ்சிவனைத்
திருவீழி மிழலைவீற் றிருந்த
கொற்றவன் றன்னைக் கண்டுகண்டுள்ளங்
குளிரவென் கண்குளிர்ந் தனவே.

## திருப்பல்லாண்டு

பாலுக்குப் பாலகன் வேண்டியழுதிடப் பாற்கட லீந்தபிரான்
மாலுக்குச் சக்கர மன்றருள் செய்தவன் மன்னிய தில்லைதன்
ஆலிக்கு மந்தணர் வாழ்கின்ற சிற்றம் பலமே யிடமாகப் [னுள்
பாலித்து நட்டம் பயிலவல் லானுக்கே பல்லாண்டு கூறுதுமே,

திருமூலதேவநாயனுர் - 10-ஆம் திருமுறை :

## திருமந்திரம்

கூறது வாகக் குறித்துநற் சக்கரம்
கூறது செய்து கொடுத்தனன் மாலுக்குக்
கூறது செய்து கொடுத்தனன் சத்திக்குக்
கூறது செய்து தரித்தனன் கோலமே.

நம்பியாண்டார் நம்பிகள் - 11-ஆம் திருமுறை :

பாடிய செந்தமி ழாற்பழங் காசு பரிசில்பெற்ற
நீடிய சீர்த்திரு ஞானசம் பந்த னிறைபுகழான்
நேடிய பூந்திரு நாவுக் கரசோ டெழின்மிழலைக்
கூடிய கூட்டத்தி னுளா தாய்த்திக் குவலயமே.

சேக்கிழார்சுவாமிகள் - 12-ஆம் திருமுறை :

காலநிலைமை யாலுங்கள் கருத்தில் வாட்ட முறீரெனினும்
ஏலவும்மை வழிபடுவார்க் களிக்க வளிக்கின்றோ மென்று

கோலங்காண எழுந்தருளிக் குலவும்பெருமை யிருவருக்கும்
ஞாலமறியப் படிக்காசு வைத்தார் மிழலை நாயகனார்.

அல்லார்கண்டத் தண்டர்பிரான் அருளாற்பெற்ற படிக்காசு
பல்லாறியன்ற வளம்பெருகப் பரமனடியா ராஞர்கள்
எல்லாமெய்தி யுண்கவென விரண்டுபொழுதும் பறைநிகழ்த்திச்
சொல்லாற்சாற்றிச் சோறிட்டார் துயர்கூர்வறுமை தொலைத்
[ திட்டா

## அருணகிரிநாதர் திருப்புகழ்

எருவாய் கருவாய் தனிலே யுருவாய்
இதுவே பயிராய் விளைவாகி
இவர்போ யவராய் அவர்போ யிவராய்
இதுவே தொடர்பாய் வெறிபோல
ஒருதா யிருதாய் பலகோடி யதாய்
உடனே யவமாய் அழியாதே
ஒருகால் முருகா பரமா குமரா
உயிர்கா வெனவோ தருள்தாராய்
முருகா வெனவோர் தரமோ தடியார்
முடிமே லிணைதாள் அருள்வோனே
முனிவோ ரமரோர் முறையோ வெனவே
முதுசூ ருரமேல் விடும்வேலா
திருமால் பிரமா அறியா தவர்சீர்
சிறுவா திருமால் மருகோனே
செழுமா மதில்சேர் அழகார் பொழில்சூழ்
திருவீ ழியில்வாழ் பெருமாளே.

## திருவீழிமிழலைத் தலபுராணம்

### முன்னைவிநாயகர்

பொன்னிகர்பைங் கொன்றையந்தார்ச் சடிலத் தேவும்
பொருப்பரைய னீன்றமட மயிலு முன்னாள்
தன்னிகரில் லாதபெருங் கயிலை மேலோர்
தனிக்களிறும் பிடியுமாய்த் தழுவ வந்தே

பன்னருஞ்சீ ரருளுருக்கொ ளிபமுகமாய்த் தோன்றும்
பண்ணவனைங் கரனொருகொம் பன்மான் முன்னோர்
முன்னுமெழிற் றிருவீழி மிழலை மேவும்
முன்னைவிநா யகனிருதாள் முடிமேற் கொள்வாம்.

## வீழிநாதர்

சீர்மேவுந் திருமகள் தன் மகிணன் மேவிச்
செங்கணிடந் தம்புயம்போ லன்பாய்ச் சாத்தக்
கூர்மேவுந் தனியாழி யவனுக் கீந்தாட்
கொண்டஅருட் கடலமரர் கோமா னெங்கோன்
ஏர்மேவு மடங்கலணி விமானம் விண்ணின்
றிழியவது கோயில் கொண்டே யெவரும் போற்றப்
பார்மேவுந் திருவீழி மிழலை மேவும்
பரன்வீழி நாதனடி பணிந்து வாழ்வாம்.

## விண்ணிழிந்தநாதர்

ஒழிவிலுயிர் கட்குயிராய்க் குணங்க ளின்றி
உருவருவ மின்றிமல மொன்று மின்றி
அழிவில்வியா பகமாயா னந்த ரூப
மாய்விளங்கும் பரம்பொருடன் னருளி னாலே
பழுதிலரி பூசைகொள்வான ருளுருக்கொ ளெந்தை
பத்தியுடன் கமலம்போ லவனிடந்து சாத்தும்
விழிமருவும் பதன்வீழி மிழலை மேவும்
விண்ணிழிந்த நாயகன்சீர் விளம்பி யுய்வாம்.

## அழகிய மாமுலையம்மையார்

மன்னியநூ புரமிலகுந் துணையடியும் நூலின்
வகிரனைய நுண்ணிடையும் பணைத்திறுமாந் துயர்ந்தே
பொன்னசல மெனவெழுந்து தாள மாலை
புரளவள ரிருதனமும் எழில்க ளெல்லாம்

பன்னவருந் திருமுகமும் கருணை நோக்கும்
பனிமலர்க்கூந் தலுமுடைய மலைமகளை யெவர்க்கும்
அன்னையைநற் றிருவீழி மிழலை மேவும்
அழகியமா முலையாளை அகத்துள்வைப்பாம்.

## பண்தயங்குமொழியாள்

இலகுபரா னருட்சத்தி பராசத்தி யாதி
யெனுஞ்சத்தி யுடனிச்சா சத்தியுயிர்க் கெல்லாம்
நலமருளு ஞான சத்தி நற்கிரியா சத்தி
நவிற்றியிடு மைந்தாயைந் தொழிலுமங்கங் காற்றி
அலகிலுயிர்க் குயிராய்விண் ணிழிந்த நாதன்
அறுகுறுஞா னக்கரும்பை யடைந்தவர்கட் கின்பப்
பலமருளுந் திருவீழி மிழலை மேவும்
பண்டயங்கு மொழியாளைப் பணிந்து வாழ்வாம்.

## படிக்காசு விநாயகர்

காரணகா ரியங்கடந்த இபமுகன் பாரதத்தைக்
கனககிரி தனில்வரைந்த கோடுடைய வெந்தை
ஏருறுநற் றமிழ்வேத மாகியபா மாலை
இசையுளசொற் குருகியுள மிறைஞ்சிநின்றே சாத்திச்
சீருறுசம் பந்தருக்கும் அப்பருக்கு மிரங்கித்
தீவினைக்கா லத்திவணுற் றின்புறுதி ரென்றே
பாரறிய அநுதினமும் விழிநகர் தனின்முன்
படிக்காசு வைத்தகண பதியிருதாள் பணிவாம்.

## முருகக் கடவுள்

கார்கொண்ட மேனியனு நாலுமுகத் தேவும்
கரஞ்சிரஞ்கொண் டெமைக்காவென் றிரந்திடக்கற்
தார்கொண்ட திண்புயவிந் திரன்முதல்வா னோர்கள் [பகப்பூந்
தருதியெம துயிரினையே யென்று சரண் புகுதச்

சூர்கொண்ட மானமுட னிடும்பயுந்து ளாகச
சுந்தரவச் சிரவாகம் பிளந்திருகூ ருக
ஏர்கொண்ட கரத்தயில்வே லேவுமருட் குமரன்
இறைவீழி நகர் முருக னிணையடிகள் தொழுவாம்

வாழ்த்து

மன்னுகநான் மறைநீதி திங்கடொரு
மும்மாரி வழாது பெய்க
இன்னலற மன்னவன் செங் கோலுலகி
லோங்குகநல் லின்ப மேவீப்
பண்ணுமுயிர்க் குழாங்களெலாம் வாழ்க அரன்
திருப்பணிகள் பாரின்மல்கத்
தன்னிகரில் சைவமுடனெஞ்செழுத்தும்
வெண்ணீறும் தழைகமாதோ.

## இத்தலத்தில் நடைபெறும் உற்சவங்கள்

*பிரம்மோற்சவம் சித்திரை மாதத்தில் மிருகசீரிஷ நக்ஷத்திரத்தில் துவஜாரோகணமும், மக நக்ஷத்திரத்தில் திருக்கலியாணமும், சித்திரை நக்ஷத்திரத்தில் தீர்த்தமும் நடைபெறுகின்றன.*

*இதைத்தவிர சஷ்டி உற்சவமும், 10 தினங்கள் திருவாதிரை உற்சவமும், நவராத்திரி உற்சவமும் நடைபெறுகின்றன.*

*ஆவணி மூலம் முதலிய பல ஏகதின உற்சவங்களும் நடைபெறுகின்றன.*